ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2306/02 - 2022 නොවැම්බර් මස 14 වැනි සඳුදා - 2022.11.14
2306/02 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 24/1951*(XIV)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவுகள் 8, 10, 14, 15, 18, 19அ, 30, 37, 42, 139இ, 139ஏ, 195 மற்றும் 231 என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

கலாநிதி **பந்துல்ல குணவர்தன**,
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2022, நவெம்பர் 14.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, மோட்டார் வாகன (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2022, நவெம்பர் 18 ஆந் திகதி பயன்வலுப் பெறுதலும் வேண்டும்.

2. மூன்றாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் மோட்டார் வாகனமொன்றின் முதலாவது பதிவுக்கு செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள்–

1A - PG 6036 — 506 (2022/11)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(அ) முதன்மை உற்பத்தியாளரால் அல்லது வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது பொருத்தப்பட்டவை அல்லது உற்பத்தி செய்து பொருத்தப்பட்டவையும் அதன்பின்னர் இலங்கைக்கு இறுக்குமதி செய்யப்பட்டவையும்;

(ஆ) மோட்டார் வாகன ஆணையாளர் நாயகருடனான ஒருப்பாட்டுடன் ஒன்றில் கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுடன் அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் அந்நோக்கத்துக்கென பதிவு செய்யப்பட்டுள்ள கைத்தொழில் ஒன்றினால் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டவை அல்லது பொருத்தப்பட்டவை அல்லது உற்பத்தி செய்யப்பட்டு பொருத்தப்பட்டவையும்; அல்லது

(இ) பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உள்ளூர் கைத்தொழிலால் உற்பத்தி செய்யப்பட்ட புதிய பாகங்களையும் செஸிகளையும் பயன்படுத்தி உள்ளூரில் வடிவமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு பொருத்தப்பட்டவையும்.

இவ்வொழுங்குவிதிகளுக்கான I ஆம் அட்டவணையின் II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறான வாகன வகுதியைச் சேர்ந்த மோட்டார் வாகனமொன்றாகவுள்ளதான மோட்டார் வாகனமொன்றின் முதலாவது பதிவுக்கான செலுத்தப்படுவதற்கான பதிவு செய்தற் கட்டணம், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

3. (1) இரண்டாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் முதலாவது பதிவுக்கான விண்ணப்பமொன்று அத்திகதியிலிருந்து தொண்ணூறு பஞ்சாங்க நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படாதவிடத்து-

(அ) மோட்டார் வாகனத்தின் இறுக்குமதி;

(ஆ) (பொருத்தமாயின்) மோட்டார் வாகனத்திற்கான சுங்கத் தீர்வை வரி உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டு அல்லது பொருத்தப்பட்டு அல்லது உற்பத்தி செய்யப்பட்டு பொருத்தப்பட்ட மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்தல்; அல்லது

(இ) அரசுக்கு அல்லது பகுதியளவிலான அரச நிறுவனமொன்றிற்கு அல்லது இலங்கை சுங்கத் தீர்வைக்கு உரித்தான அல்லது பதிவு செய்யப்படாத வாகனங்களின் ஏலவிற்பனை,

தாமதமாகிய காலப்பகுதியைப் பொறுத்து, மேலதிக தாமதக் கட்டணமொன்று ஒழுங்குவிதி 2 இன் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து, உபஒழுங்குவிதி 2 இல் குறித்துரைக்கப்பட்டவாறு விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வாகன வகுதிகளுக்கமைய செலுத்தப்படற்பாலதான மேலதிக தாமதக் கட்டணமானது, அவ்வட்டவணையின் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தாமதமாகிய காலப்பகுதியைப் பொறுத்து, அவ்வட்டவணையின் நிரல் III இன் நேரொத்த பதில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

4. (1) மோட்டார் வாகனமொன்றின் தற்காலிகச் சொந்தக்காரராக ஆளொருவரைப் பதிவு செய்வதற்காக செலுத்தப்படற்பாலதான கட்டணமானது-

(அ) வழமை அடிப்படையில் ஆயிரம் ரூபாவாதல் வேண்டும்;

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் இரண்டாயிரம் ரூபாவாதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஒரு நாள் அடிப்படையில் மூவாயிரம் ரூபாவாதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) இன் கீழ் ஆக்கப்பட்ட பதிவினை இல்லாதாக்குவதற்கு செலுத்தப்படற்பாலதான கட்டணமானது-

(அ) வழமை அடிப்படையில் ஆயிரம் ரூபாவாதல் வேண்டும்;

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் இரண்டாயிரம் ரூபாவாதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஒரு நாள் அடிப்படையில் மூவாயிரம் ரூபாவாதல் வேண்டும்.

5. ஆறாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை III இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வாகன வகுதிகள் தொடர்பில் மோட்டார் வாகனமொன்றின் புதிய சொந்தக்காரராக ஆளொருவரைப் பதிவு செய்வதற்காக செலுத்தப்படற்பாலதான கட்டணமானது, அவ்வட்டவணையின் முறையே நிரல் II , நிரல் III, நிரல் IV இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறு வழமை அடிப்படையில், முன்னுரிமை அடிப்படையில் மற்றும் ஒரு நாள் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

6. (1) (அ) அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரினால் செய்யப்பட்ட தன்னிச்சையான கைமாற்றத்தின் மேல் மோட்டார் வாகனம் ஒன்றின் உடைமை மாற்றலிலிருந்து பதினான்கு நாட்களினுள் மோட்டார் வாகனமொன்றின் புதிய சொந்தக்காரராக ஆளொருவரைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படாதவிடத்து, ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாமதக் கட்டணமொன்று, ஒழுங்குவிதி 5 இன் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து, பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்டவாறு செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை IV இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வாகன வகுதிகள் தொடர்பில் ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாமதக் கட்டணமானது, அவ்வட்டவணையின் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், இவ்வொழுங்குவிதியின் கீழ் செலுத்தப்படற்பாலதான அதிகபட்ச மேலதிக தாமதக் கட்டணமானது, அவ்வட்டவணையின் நிரல் III இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தை விஞ்சலாகாது.

(2) அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் இறப்பின் மேல் செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் உடைமை மாற்றலிலிருந்து நூற்றெண்பது நாட்களினுள் மோட்டார் வாகனமொன்றின் புதிய சொந்தக்காரராக ஆளொருவரைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படாதவிடத்து, ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாமதக் கட்டணமொன்று, ஒழுங்குவிதி 5 இன் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து, பந்தி (ஆ) வின் உபஒழுங்குவிதி (1) இல் குறித்துரைக்கப்பட்டவாறு செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய மோட்டார் வாகனத்தின் இறந்த பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் இறுதிவிருப்பாவண வழக்கு நடவடிக்கைகளின் விளைவாக நீதிமன்றக் கட்டளையொன்று ஆக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களினுள் பதிவுக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படாதவிடத்து, ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாமதக் கட்டணமொன்று, ஒழுங்குவிதி 5 இன் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து, பந்தி (ஆ) வின் உபஒழுங்குவிதி (1) இல் குறித்துரைக்கப்பட்டவாறு செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) அரசுக்கு அல்லது பகுதியளவிலான அரச நிறுவனமொன்றுக்கு அல்லது இலங்கை சுங்கத் தீர்வைக்கு உரித்தான வாகனத்தின் விற்பனையின்மீது, அத்தகைய விற்பனையின் மேல் மோட்டார் வாகனம் ஒன்றின் உடைமை மாற்றலிலிருந்து நூற்றெண்பது நாட்களினுள் புதிய சொந்தக்காரராக பதிவு செய்வதற்காக விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படாதவிடத்து, ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாமதக் கட்டணமொன்று, ஒழுங்குவிதி 5 இன் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து, பந்தி (ஆ) வின் உபஒழுங்குவிதி (1) இல் குறித்துரைக்கப்பட்டவாறு செலுத்தப்படுதல் வேண்டும்.

7. இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை V இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வாகன வகுதிகள் தொடர்பில் பதிவுச் சான்றிதழொன்றின் இணைப்பிரதியை வழங்குவதற்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணமானது, அவ்வட்டவணையின் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறு வழமை அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

8. (1) மோட்டார் வாகனமொன்றின் பதிவினை இல்லாதாக்குவதற்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணமானது-

(அ) வழமை அடிப்படையில் ஆயிரம் ரூபாவாதல் வேண்டும்;

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவாதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஒரு நாள் அடிப்படையில் இரண்டாயிரம் ரூபாவாதல் வேண்டும்.

(2) மோட்டார் வாகனமொன்றின் பதிவு செய்வதற்காக செலுத்தப்படற்பாலதான கட்டணமானது-

(அ) வழமை அடிப்படையில் ஆயிரம் ரூபாவாதல் வேண்டும்;

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவாதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஒருநாள் அடிப்படையில் இரண்டாயிரம் ரூபாவாதல் வேண்டும்.

*9. செலுத்தப்படற்பாலதான கட்டணமானது-*

*(அ)* மோட்டார் வாகனங்கள், தனிச் சொந்தக்காரராக எவரேனும் ஆளின் பெயரை பதிவேட்டில் பதிவு செய்தலானது-

(i) வழமை அடிப்படையில் இரண்டாயிரம் ரூபாவாதல் வேண்டும்;

(ii) முன்னுரிமை அடிப்படையில் மூவாயிரம் ரூபாவாதல் வேண்டும்; அத்துடன்

(iii) ஒரு நாள் அடிப்படையில் நான்காயிரம் ரூபாவாதல் வேண்டும்.

*(ஆ)* மோட்டார் வாகனங்கள், தனிச் சொந்தக்காரரின் பெயர் பதிவேட்டின் பதிவிலிருந்து நீக்கப்படுதலானது-

(i) வழமை அடிப்படையில் ஆயிரம் ரூபாவாதல் வேண்டும்;

(ii) முன்னுரிமை அடிப்படையில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவாதல் வேண்டும்; அத்துடன்

(iii) ஒரு நாள் அடிப்படையில் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாதல் வேண்டும்.

*10.* இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VI இன் பாகம் I மற்றும் பாகம் II இல் காணப்படுகின்ற நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வாகன வகுப்பு மற்றும் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய எடையினைச் சேர்ந்த பெற்றோலையும், டீசலையும் பயன்படுத்தி உந்தப்படுபவையுமான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வருடாந்த வாகன அரசிறை உரிமைக் கட்டணமானது, அவ்வட்டவணையின் நிரல் III இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

*(அ)* மின்சாரவழிவகை, சூரியசக்தி, திரவப்பெற்றோலிய வாயு, அல்லது மாற்று எரிப்பொருளினால் உந்தப்படும் மோட்டார் வாகனமொன்று தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வருடாந்த அரசிறை அரசிறை உரிமக் கட்டணமானது இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VI இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டவாறான அதையொத்த வகுப்பைச் சேர்ந்ததும் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறான அதையொத்த எடையைக் கொண்டதுமான பெற்றோல் மோட்டார் வாகனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான இவ்வொழுங்குவிதிக்கான அட்டவணை VI இன் நிரல் III இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட, கட்டணத்தின் ஐம்பது சதவீதமாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

*(ஆ)* ஏதேனும் மின்சாரவழிவகை, சூரியசக்தி, திரவப்பெற்றோலிய வாயு, அல்லது மாற்று எரிப்பொருளுடன் சேர்த்து பெற்றோலியத் தயாரிப்பொன்றினால் உந்தப்பட்ட மோட்டார் வாகனமொன்று தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வருடாந்த அரசிறை உரிமக் கட்டணமானது இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VI இன் நிரல் I இன் குறித்துரைக்கப்பட்டவாறான அதையொத்த வகுப்பொன்றைச் சேர்ந்ததும் அவ்வட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறான அதையொத்த எடையைக் கொண்டதுமான மோட்டார் வாகனமொன்று தொடர்பில் செலுத்தப்படற்பாலதான இவ்வொழுங்குவிதிக்கான அட்டவணை VI இன் நிரல் III இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட, வருடாந்த வாகன அரசிறை உரிமைக் கட்டணத்தை ஒத்திருத்தல் வேண்டும்.

*11.* இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VII இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டவாறாக சிறிய பஸ் வண்டிகள் மற்றும் அத்தகைய வேறு மோட்டார் வாகனங்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வருடாந்த அரசிறை உரிமைக் கட்டணமானது, அவ்வட்டவணையின் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

*12.* (இவ்வொழுங்குவிதியில் "வழங்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), எத்தேதியில் ஆளொருவர் அத்தகைய கொடுப்பனவை செய்யுமாறு தேவைப்படுத்தப்படுகின்றாரோ அத்தேதியன்று அல்லது அதற்கு முன்னதாக விடயத்திற்கேற்ப, 10ஆம் அல்லது 11 ஆம் ஒழுங்குவிதிகளிற் குறித்துறைக்கப்பட்டவாறானதுமான இயைபான வருடாந்த வாகன அரசிறை உரிமக் கட்டணத்தை ஆளொருவர் செலுத்தத் தவறுமிடத்து, பின்வரும் முறையில் கணிப்பீடு செய்யப்படும் மேலதிக தாமத அறவீடு அத்தகைய ஆள்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்:-

*(அ)* வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அது செலுத்தப்படுமிடத்து, செலுத்தப்படற்பாலதான இயைபான வருடாந்த வாகன அரசிறை உரிமக் கட்டணத்தின் பத்துச் சதவீதம்;

(ஆ) வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர் ஆனால் ஓராண்டினுள் அது செலுத்தப்படுமிடத்து, செலுத்தப்படற்பாலதான இயைபான வருடாந்த வாகன அரசிறை உரிமக் கட்டணத்தின் இருபது சதவீதம்; அத்துடன்

(இ) வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டுக்குப் பின்னர் அது செலுத்தப்படுமிடத்து, செலுத்தப்படற்பாலதான இயைபான வருடாந்த வாகன அரசிறை உரிமக் கட்டணத்தின் முப்பது சதவீதம்.

13. (1) பணிகளை செயல்படுத்துதல் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணமானது-

(அ) மேற்பார்வை மற்றும் பதிவு;

(ஆ) பதிவினை புதுப்பித்தல்;

(இ) பதிவுச் சான்றிதழொன்றின் இணைப்பிரதியை வழங்குதல்,

(2) பணிகளை புரிதல் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணமானது-

(அ) சாரதிப் பாடசாலையொன்றின் பதிவினைப் பதிவு செய்தலும் புதுப்பித்தலும்; அத்துடன்

(ஆ) சாரதி அறிவுறுத்துநரொருவர் அல்லது உதவி சாரதி அறிவுறுத்துநரொருவரின் பதிவினைப் பதிவு செய்தலும் புதுப்பித்தலும்,

இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VIII இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டவாறு சாரதி அறிவுறுத்துநரொருவரின் அல்லது உதவி சாரதி அறிவுறுத்துநரொருவரின் பதிவினைப் புதுப்பித்தலுக்கான தாமதக் கட்டணம், ஆணையாளர் தலைமையதிபதியினால், வகுப்பு அ, வகுப்பு ஆ, மற்றும் வகுப்பு இ ஆகியவற்றின்கீழ் வரும் அத்தகைய சாரதிப் பாடசாலைகள், சாரதி அறிவுறுத்துநர் அல்லது உதவி சாரதி அறிவுறுத்துநர் தொடர்பில் அவ்வட்டவணையின் முறையே நிரல் III, நிரல் IV, நிரல் V இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

14. (1) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை IX இன் *நிரல் I* இல் குறித்துரைக்கப்பட்டனவாறு ஆணையாளர் தலைமையதிபதியினால் புரியப்படுகின்ற ஏனைய பணிகள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணமானது, அவ்வட்டவணையின் *நிரல் II* இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(2) அவ்வட்டவணையின் நிரல் I இன் 10(அ) என்னும் விடயத்தின் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டனவாறு ஆணையாளர் தலைமையதிபதியினால் புரியப்படுகின்ற அத்தகைய பணிகள் தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை IX இன் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலுத்தப்படற்பாலதான கட்டணமானது, 2009ஆம் ஆண்டு மார்ச் 13ஆந் திகதி முதல் 2010ஆம் ஆண்டு மே 2ஆந் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் லொறிகள் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது, ஆயின் அவற்றின் மொத்த வாகன எடை 3500 கி.கி க்குக் குறைவானதாயிருத்தல் வேண்டும்.

15. பின்னராக திருத்தப்பட்டதான 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 9ஆந் திகதிய 1722/27 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மோட்டார் வாகன (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள், 2011 இத்தால் இல்லாது ஒழிக்கப்படுகின்றன.

16. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

"சட்டம்" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம் எனப் பொருளாகும்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, மோட்டார் வாகனத்தின் ஆணையாளர் தலைமைபதி எனப் பொருளாகும்;

"இரு நோக்கு வாகனம்", "மொத்த வாகன எடை (மொவாஎ)", "கை உழவு இயந்திரம்", "கனரக மோட்டார் கோச்", "கனரக மோட்டார் லொறி", "நில வாகனம்", "இலகுரக மோட்டார் கோச்", "இலகுரக மோட்டார் சைக்கிள்", "இலகுரக மோட்டார் லொறி", "மோட்டார் பிணியாளர் வண்டி", "மோட்டார் கார்", மோட்டார் கோச்", "மோட்டார் சைக்கிள்", "மோட்டார் பிணவண்டி", "மோட்டார் மனை", "மோட்டார் லொறி", மோட்டார் முச்சக்கரவண்டி", "மோட்டார் முச்சக்கர வேன்", "ஓம்னி பஸ்", "தனியார் கோச்", "நான்கு சில்லு வண்டி", "விசேட நோக்கு வாகனம்" மற்றும் "அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம்" என்பன சட்டத்திலுள்ள அதே பொருளினையுடையனவாதல் வேண்டும்;

"கனரக இழுவை வண்டி" என்பது, என்பது 750 கிலோகிராம்களுக்கு அதிக சுமைதாங்கும் ஆனால் மோட்டார் சைக்கிலொன்றுடன் பிணைக்கப்பட்ட பக்க கார் ஒன்றை உள்ளடக்காத, மோட்டார் வாகனமொன்றுடன் பிணைக்கப்படும் அல்லது மோட்டார் வாகனமொன்றுடன் இழுத்துச் செல்லப்படும் பொருட்கள், வாயுக்கள் அல்லது திரவங்களை கொண்டு செல்வதற்காக ஒவ்வொரு அம்சமும் முழுமையாக அல்லது பிரதானமாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு கூண்டு வண்டி அல்லது இழுவை வண்டி எனப் பொருள்படும்.

"இலகுரக இழுவை வண்டி" என்பது 750 கிலோகிராம்களுக்கு மேற்படாத அதிக சுமைதாங்கும் ஆனால் மோட்டார் சைக்கிலொன்றுடன் பிணைக்கப்பட்ட கார் ஒன்றை உள்ளடக்காத, மோட்டார் வாகனமொன்றுடன் பிணைக்கப்படும் அல்லது மோட்டார் வாகனமொன்றுடன் இழுத்துச் செல்லப்படும் பொருட்கள், வாயுக்கள் அல்லது திரவங்களை கொண்டுச் செல்வதற்காக ஒவ்வொரு அம்சமும் முழுமையாக அல்லது பிரதானமாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு கூண்டு வண்டி அல்லது இழுவை வண்டி எனப் பொருள்படும்.

"மாற்று எரிபொருளினால் உந்தப்படும் மோட்டார் வாகனம்" என்பது, பெற்றோல், டீசல் அல்லது வாயு அல்லாத ஏனைய மாற்று எரிபொருளினால் உந்தப்படும், ஆனால் மாற்று எரிபொருளினால் உந்தப்படும் இரு எரிபொருள் வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை உள்ளடக்காத ஏதேனும் மோட்டார் வாகனம் எனப் பொருளாகும்;

"மின்சார வழிவகையினால் உந்தப்படும் மோட்டார் வாகனங்கள்" என்பது, மின்சக்தி அல்லது வலுவினை பயன்படுத்தி உந்தப்படும் ஏதேனும் மோட்டார் வாகனம் எனப் பொருளாகும்;

"வழமை அடிப்படை" என்பது, எத்தேதியிலிருந்து அதனது செயலாற்றுகைக்காக கோரிக்கையொன்று விடுக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து இருபத்தொரு வேலை நாட்கள் காலப்பகுதியொன்றுக்குப் பின்னர் செயற்பாடுகளை செயலாற்றுதல்; அத்துடன்

"முன்னுரிமை அடிப்படை" என்பது, எத்தேதியிலிருந்து அதனது செயலாற்றுகைக்காக கோரிக்கையொன்று விடுக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து இருபத்தொரு வேலை நாட்கள் காலப்பகுதியொன்றிற்குள் செயற்பாடுகளை செயலாற்றுதல்.

**அட்டவணை I**

(ஒழுங்குவிதி 2)

**முதற்பதிவுக்கான கட்டணங்கள்**

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | வாகன வகுதி | செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா) |
| 1. | மோட்டார் கார் - 1600 சீசீ அல்லது 1600 சீசீ /80 கே.டபிள்யூ க்கு குறைவாக அல்லது 80 கே.டபிள்யூ க்கு அதிகமாக | 25,000.00 |
| 2. | மோட்டார் கார் - 1600 சீசீ க்கு அதிகமாக /80 கே.டபிள்யூ அதிகமாக | 40,000.00 |
| 3. | இரு நோக்கு வாகனம் - 1000 சீசீ அதிகமாக /50 கே.டபிள்யூ க்கு அதிகமாக | 20,000.00 |
| 4. | இரு நோக்கு வாகனம் | 25,000.00 |
| 5. | நில வாகனம் | 8,000.00 |
| 6. | கை உழவு இயந்திரம் | 2,000.00 |
| 7. | விசேட நோக்கு வாகனம் | 30,000.00 |
| 8. | இலகுரக மோட்டார் சைக்கிள் | 3,000.00 |
| 9. | மோட்டார் சைக்கிள் | 3,000.00 |
| 10. | மோட்டார் முச்சக்கரவண்டி | 5,000.00 |
| 11. | மோட்டார் முச்சக்கர வேன் | 5,000.00 |
| 12. | நான்கு சில்லு வண்டி | 7,000.00 |

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *வாகன வகுதி* | *செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா)* |
| 13. மோட்டார் மனை | 35,000.00 |
| 14. இலகுரக மோட்டார் லொறி | 7,000.00 |
| 15. மோட்டார் லொறி | 7,000.00 |
| 16. முதன்மை இயங்கி (மோட்டார் லொறி/கனரக மோட்டார் லொறி) | 25,000.00 |
| 17. இலகுரக மோட்டார் கோச் | 7,000.00 |
| 18. மோட்டார் கோச் | 7,000.00 |
| 19. அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம் | 2,000.00 |
| 20. மோட்டார் பிணியாளர் அவசரவண்டி | 10,000.00 |
| 21. மோட்டார் பிணவண்டி | 10,000.00 |
| 22. கனரக இழுவை வண்டி | 15,000.00 |
| 23. இலகுரக இழுவை வண்டி | 7,000.00 |

**அட்டவணை II**

[ஒழுங்குவிதி 3]

**தாமதிக்கப்பட்ட முதலாவது பதிவுக்கான கட்டணங்கள்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *வாகன வகுதி* | *தாமதக் காலப்பகுதி* | *தாமதக் கட்டணம் (ரூபா)* |
| 1. மோட்டார் கார் | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 12,000.00 |
| 2. மோட்டார் மனை | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 15,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 20,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 30,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 50,000.00 |
| 3. இரு நோக்கு வாகனம் (1000 சீசீ அல்லது 1000 சீசீ க்கு குறைவாக /50 கே.டபிள்யூ அல்லது 50 கே.டபிள்யூ க்கு குறைவாக | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 6,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 10,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 15,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 20,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 35,000.00 |
| 4. இரு நோக்கு வாகனம் (1000 சீசீ க்கு அதிகமாக /50 கே. டபிள்யூ க்கு அதிகமாக | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 12,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 15,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 20,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 30,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 50,000.00 |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| வாகன வகுதி | தாமதக் காலப்பகுதி | தாமதக் கட்டணம் (ரூபா) |
| 5. நில வாகனம் | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 5,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 8,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 10,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 12,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 15,000.00 |
| 6. கை உழவு இயந்திரம் | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 3,500.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 4,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 5,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 6,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 8,000.00 |
| 7. விசேட நோக்கு வாகனம் | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 6,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 10,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 14,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 18,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 20,000.00 |
| 8. இலகுரக மோட்டார் சைக்கிள் | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 3,000.00 |
| 9. மோட்டார் சைக்கிள் | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 3,500.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 4,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 5,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 8,000.00 |
| 10 மோட்டார் முச்சக்கரவண்டி | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 5,000.00 |
| 11. மோட்டார் முச்சக்கர வேன் | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 6,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 8,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 10,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 12,000.00 |
| 12. நான்கு சில்லு வண்டி | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 8,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 10,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 12,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 14,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 16,000.00 |
| 13. இலகுரக மோட்டார் லொறி | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 8,000.00 |
| 14. மோட்டார் லொறி | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 10,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 13,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 15,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 19,600.00 |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| வாகன வகுதி | தாமதக் காலப்பகுதி | தாமதக் கட்டணம் (ரூபா) |
| 15. முதன்மை இயங்கி (மோட்டார் லொறி/ கனரக மோட்டார் லொறி) | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 8,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 10,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 14,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 18,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 20,000.00 |
| 16. இலகுரக மோட்டார் கோச் | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 14,000.00 |
| 17. மோட்டார் கோச் | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 16,800.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 19,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 21,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 27,000.00 |
| 18. அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம் | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 4,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 5,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 6,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 8,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 10,000.00 |
| 19. மோட்டார் பிணியாளர் அவசரவண்டி | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 4,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 5,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 6,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 8,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 9,000.00 |
| 20. மோட்டார் பிணவண்டி | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 12,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 14,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 16,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 18,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 20,000.00 |
| 21. கனரக இழுவை வண்டி | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 10,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 12,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 14,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 16,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 18,000.00 |
| 22. இலகுரக இழுவை வண்டி | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக | 4,000.00 |
| | ஓராண்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக | 6,000.00 |
| | 2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக | 8,000.00 |
| | 3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக | 10,000.00 |
| | 5 ஆண்டுகளுக்கு மேலாக | 12,000.00 |

## அட்டவணை III

[ஒழுங்குவிதி 5]

### புதிய சொந்தக்காரரைப் பதிவு செய்தலுக்கான கட்டணங்கள்

| *நிரல் I* | | *நிரல் II* | *நிரல் III* | *நிரல் IV* |
|---|---|---|---|---|
| | *வாகன வகுதி* | *வழமை அடிப்படையிலான கட்டணம (ரூபா)* | *முன்னுரிமை அடிப்படையிலான கட்டணம் (ரூபா)* | *ஒரு நாள் அடிப்படையிலான கட்டணம் (ரூபா)* |
| 1. | மோட்டார் கார் | 5,000.00 | 6,500.00 | 7,500.00 |
| 2. | இருநோக்கு வாகனம் | 5,000.00 | 6,500.00 | 7,500.00 |
| 3. | நில வாகனம் | 2,400.00 | 3,000.00 | 4,000.00 |
| 4. | கை உழவு இயந்திரம் | 1,000.00 | 1,300.00 | 2,300.00 |
| 5. | விசேட நோக்கு வாகனம் | 5,000.00 | 6,500.00 | 7,500.00 |
| 6. | இலகுரக மோட்டார் சைக்கிள் | 1,000.00 | 1,300.00 | 2,300.00 |
| 7. | மோட்டார் சைக்கிள் | 1,000.00 | 1,300.00 | 2,300.00 |
| 8. | மோட்டார் முச்சக்கரவண்டி | 1,000.00 | 1,300.00 | 2,300.00 |
| 9. | மோட்டார் முச்சக்கர வேன் | 1,000.00 | 1,300.00 | 2,300.00 |
| 10. | நான்கு சில்லு வண்டி | 3,000.00 | 4,000.00 | 6,000.00 |
| 11. | மோட்டார் மனை | 5,000.00 | 6,000.00 | 7,500.00 |
| 12. | இலகுரக மோட்டார் லொறி | 5,000.00 | 6,500.00 | 7,500.00 |
| 13. | மோட்டார் லொறி | 5,000.00 | 6,500.00 | 7,500.00 |
| 14. | முதன்மை இயங்கி (மோட்டார் லொறி/கனரக மோட்டார் லொறி) | 5,000.00 | 6,500.00 | 7,500.00 |
| 15. | இலகுரக மோட்டார் கோச் | 5,000.00 | 6,500.00 | 7,500.00 |
| 16. | மோட்டார் கோச் | 5,000.00 | 6,500.00 | 7,500.00 |
| 17. | அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம் | 1,000.00 | 1,300.00 | 2,300.00 |
| 18. | மோட்டார் பிணியாளர் அவசரவண்டி | 2,000.00 | 2,600.00 | 3,600.00 |
| 19. | மோட்டார் பிணவண்டி | 2,000.00 | 2,600.00 | 3,600.00 |
| 20. | கனரக இழுவை வண்டி | 4,000.00 | 5,200.00 | 6,200.00 |
| 21. | இலகுரக இழுவை வண்டி | 2,000.00 | 2,600.00 | 3,600.00 |

## அட்டவணை IV

[ஒழுங்குவிதி 6]

### தாமதிக்கப்பட்ட புதிய சொந்தக்காரரைப் பதிவு செய்தலுக்கான கட்டணங்கள்

| *நிரல் I* | | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| | *வாகன வகுதி* | *ஒரு நாளுக்கான தாமதக் கட்டணம் (ரூபா.)* | *அதிகபட்ச தாமதக் கட்டணம் (ரூபா.)* |
| 1. | மோட்டார் கார் | 100.00 | 100.000.00 |
| 2. | இருநோக்கு வாகனம் | 100.00 | 100,000.00 |

| நிரல் I | | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| வாகன வகுதி | | ஒரு நாளுக்கான தாமதக் கட்டணம் (ரூபா.) | அதிகபட்ச தாமதக் கட்டணம் (ரூபா.) |
| 3. | நில வாகனம் | 50.00 | 50,000.00 |
| 4. | கை உழவு இயந்திரம் | 25.00 | 25,000.00 |
| 5. | விசேட நோக்கு வாகனம் | 100.00 | 100,000.00 |
| 6. | லகுரக மோட்டார் சைக்கிள் | 50.00 | 50,000.00 |
| 7. | மோட்டார் சைக்கிள் | 50.00 | 50,000.00 |
| 8. | மோட்டார் முச்சக்கரவண்டி | 50.00 | 50,000.00 |
| 9. | மோட்டார் முச்சக்கர வேன் | 50.00 | 50,000.00 |
| 10. | நான்கு சில்லு வண்டி | 50.00 | 50,000.00 |
| 11. | மோட்டார் மனை | 100.00 | 100,000.00 |
| 12. | இலகுரக மோட்டார் லொறி | 100.00 | 100,000.00 |
| 13. | மோட்டார் லொறி | 100.00 | 100,000.00 |
| 14. | முதன்மை இயங்கி (மோட்டார் லொறி/கனரக மோட்டார் லொறி) | 100.00 | 100,000.00 |
| 15. | இலகுரக மோட்டார் கோச் | 100.00 | 100,000.00 |
| 16. | மோட்டார் கோச் | 100.00 | 100,000.00 |
| 17. | அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம் | 25.00 | 25,000.00 |
| 18. | மோட்டார் பிணியாளர் அவசரவண்டி | 100.00 | 100,000.00 |
| 19. | மோட்டார் பிணவண்டி | 100.00 | 100,000.00 |
| 20. | கனரக இழுவை வண்டி | 100.00 | 100,000.00 |
| 21. | இலகுரக இழுவை வண்டி | 50.00 | 50,000.00 |

**அட்டவணை V**

[ஒழுங்குவிதி 7]

**பதிவு செய்தலுக்கான இணைப்பிரதியொன்றை வழங்குதலுக்கான கட்டணங்கள்**

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| வாகன வகுதி | | வழமை அடிப்படையிலான கட்டணம் (ரூபா.) |
| 1. | மோட்டார் கார், இருநோக்கு வாகனம், விசேட நோக்கு வாகனம், மோட்டார் மனை, இலகுரக மோட்டார் சைக்கிள், மோட்டார் லொறி, முதன்மை இயங்கி, இலகுரக மோட்டார், மோட்டார் கோச், மோட்டார் பிணியாளர் அவசரவண்டி, மோட்டார் பிணவண்டி | 6,500.00 |
| 2. | மோட்டார் சைக்கிள், மோட்டார் முச்சக்கரவண்டி, நில வாகனம், மேலே குறித்துரைக்கப்பட்ட வாகன வகுதி I இன் குறித்துரைக்கப்படாத ஏனைய வாகனங்கள் | 3,500.00 |

## அட்டவணை VI

[ஒழுங்குவிதி 10]

### பதிவு செய்தலுக்கான இணைப்பிரதியொன்றை வழங்குதலுக்கான கட்டணங்கள்

### பகுதி I

| *நிரல் I* | *நிரல் II* | | | *நிரல் III* |
|---|---|---|---|---|
| *வாகனத்தின் வகுப்பு* | *பாரமேற்றப்படாத எடை* | | | *செலுத்தப் படற்பாலதான கட்டணம் (ரூபா.)* |
| 1. மோட்டார் கார் | (அ) | (i) | 500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 762 கி.கி குறைவாக (பெற்றோல்) | 2,500.00 |
| | | (ii) | 500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 762 கி.கி குறைவாக (டீசல்) | 3,900.00 |
| | (ஆ) | (i) | 500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 762 கி.கி குறைவாக (பெற்றோல்) | 2,600.00 |
| | | (ii) | 500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 762 கி.கி குறைவாக (டீசல்) | 5,000.00 |
| | (இ) | (i) | 500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 762 கி.கி குறைவாக (பெற்றோல்) | 4,000.00 |
| | | (ii) | 500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 762 கி.கி குறைவாக (டீசல்) | 7,500.00 |
| | (ஈ) | (i) | 500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 762 கி.கி குறைவாக (பெற்றோல்) | 5,000.00 |
| | | (ii) | 500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 762 கி.கி குறைவாக (டீசல்) | 10,000.00 |

### பகுதி II

| *நிரல் I* | *நிரல் II* | | | *நிரல் III* |
|---|---|---|---|---|
| *வாகனத்தின் வகுப்பு* | *மொத்த வாகன எடை* | | | *செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.)* |
| 1. இருநோக்கு வாகனம் | அ) | (i) | 1,000 கி.கி ற்கு குறைவாக (பெற்றோல்) | 2,500.00 |
| 2. மோட்டார் மனை | | (ii) | 500 கி.கி ற்கு குறைவாக (டீசல்) | 4,500.00 |
| | (ஆ) | (i) | 1,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 1500 கி.கி குறைவாக (பெற்றோல்) | 3,000.00 |
| | | (ii) | 1,500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 2,000 கி.கி குறைவாக (டீசல்) | 5,000.00 |
| | (இ) | (i) | 500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 762 கி.கி குறைவாக (பெற்றோல்) | 3,500.00 |
| | | (ii) | 1,500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 2,000 கி.கி குறைவாக (டீசல்) | 5,500.00 |

| நிரல் I | | நிரல் II | | | நிரல் III |
|---|---|---|---|---|---|
| வாகனத்தின் வகுப்பு | | மொத்த வாகன எடை | | | செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.) |
| | | (ஈ) | (i) | 2,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 2,500 கி.கி குறைவாக (பெற்றோல்) | 4,000.00 |
| | | | (ii) | 2,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 2,500 கி.கி குறைவாக (டீசல்) | 7,000.00 |
| | | (உ) | (i) | 2,500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 3,000 கி.கி குறைவாக (பெற்றோல்) | 5,500.00 |
| | | | (ii) | 2,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 3,000 கி.கி குறைவாக (டீசல்) | 11,500.00 |
| | | (ஊ) | (i) | 3,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 3,500 கி.கி குறைவாக (பெற்றோல்) | 12,500.00 |
| | | | (ii) | 3,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 3,500 கி.கி குறைவாக (டீசல்) | 12,500.00 |
| | | (எ) | (i) | 3,500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 4,000 கி.கி குறைவாக (பெற்றோல்) | 15,000.00 |
| | | | (ii) | 3,500 கி.கி அல்லது மேலாக, ஆனால் 4,000 கி.கி குறைவாக (டீசல்) | 15,000.00 |
| | | (ஏ) | (i) | 4,000 கி.கி அல்லது மேலாக (பெற்றோல்) | 19,000.00 |
| | | | (ii) | 4,000 கி.கி அல்லது மேலாக (டீசல்) | 19,000.00 |
| 4. | நில வாகனம் | (அ) | | 1,778 கி.கி ற்கு குறைவாக | 600.00 |
| 5. | கை உழவு இயந்திரம் | (ஆ) | | 1,778 கி.கி அல்லது மேலாக, ஆனால் 2,032, கி.கி குறைவாக | 1,200.00 |
| 6. | இலகுரக இழுவை வண்டி | (இ) | | 2,032 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 2,540 கி.கி ற்கு குறைவாக | 1,400.00 |
| | | (ஈ) | | 2,540 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 3,048 கி.கி ற்கு குறைவாக | 1,700.00 |
| | | (உ) | | 3,048 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 3,556 கி.கி ற்கு குறைவாக | 2,000.00 |
| 7. | உழவு இயந்திர இழுவை வண்டி | (ஊ) | | 3,556 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 5,080 கி.கி ற்கு குறைவாக | 2,100.00 |

| நிரல் I | | நிரல் II | | | நிரல் III |
|---|---|---|---|---|---|
| வாகனத்தின் வகுப்பு | | மொத்த வாகன எடை | | | செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.) |
| | | (எ) | | 5,080 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 15,240 கி.கி ற்கு குறைவாக | 3,000.00 |
| | | (ஏ) | | 15,240 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 25,400 கி.கி ற்கு குறைவாக | 3,500.00 |
| | | (ஐ) | | 25,400 கி.கி ற்கு அல்லது மேலாக | 4,500.00 |
| 8. | இலகுரக மோட்டார் சைக்கிள் | | | | 900.00 |
| 9. | மோட்டார் சைக்கிள் | | | | 900.00 |
| 10. | மோட்டார் முச்சக்கரவண்டி | | | | 1,000.00 |
| 11. | மோட்டார் முச்சக்கர வேன் | | | | 1,000.00 |
| 12. | நான்கு சில்லு வண்டி | | | | 1,300.00 |
| 13. | விசேட நோக்கு வாகனம் | (அ) | (i) | 2,000 கி.கி ற்கு குறைவாக (பெற்றோல்) | 2,000.00 |
| | | | (ii) | 2,000 கி.கி ற்கு குறைவாக (டீசல்) | 4,000.00 |
| 14. | இலகுரக மோட்டார் லொறி | (ஆ) | (i) | 2,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 5,000 கி.கி குறைவாக (பெற்றோல்) | 2,500.00 |
| | | | (ii) | 2,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 5,000 கி.கி குறைவாக (டீசல்) | 5,000.00 |
| 15. | மோட்டார் லொறி | (இ) | (i) | 5,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 10,000 கி.கி குறைவாக (பெற்றோல்) | 3,500.00 |
| | | | (ii) | 5,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 10,000 கி.கி குறைவாக (டீசல்) | 7,500.00 |
| 16. | முதன்மை இயங்கி மோட்டார் லொறி | (ஈ) | (i) | 10,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 15,000 கி.கி குறைவாக (பெற்றோல்) | 4,000.00 |
| | | | (ii) | 10,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 15,000 கி.கி குறைவாக (டீசல்) | 9,000.00 |
| 17. | மோட்டார் பிணியாளர் அவசரவண்டி | (உ) | (i) | 15,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 20,000 கி.கி குறைவாக (பெற்றோல்) | 6,000.00 |
| | | | (ii) | 15,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 20,000 கி.கி குறைவாக (டீசல்) | 12,500.00 |
| 18. | மோட்டார் பிணவண்டி | (ஊ) | (i) | 20,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 25,000 கி.கி குறைவாக (பெற்றோல்) | 6,000.00 |
| | | | (ii) | 20,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 25,000 கி.கி குறைவாக (டீசல்) | 15,000.00 |
| | | (எ) | (i) | 25,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 30,000 கி.கி குறைவாக (பெற்றோல்) | 7,500.00 |

| *நிரல் I* | *நிரல் II* | | | *நிரல் III* |
|---|---|---|---|---|
| *வாகனத்தின் வகுப்பு* | *மொத்த வாகன எடை* | | | *செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.)* |
| | | (ii) | *25,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 30,000 கி.கி குறைவாக (டீசல்)* | *17,500.00* |
| | *(ஏ)* | (i) | *30,000 கி.கி அல்லது மேலாக (பெற்றோல்)* | *9,000.00* |
| | | (ii) | *30,000 கி.கி அல்லது மேலாக (டீசல்)* | *19,000.00* |
| *19. அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம்* | *(அ)* | | *750 கி.கி ற்கு குறைவாக (பெற்றோல்)* | *800.00* |
| | *(ஆ)* | | *750 கி.கி ற்கு குறைவாக (டீசல்)* | *900.00* |
| | *(இ)* | | *750 கி.கி அல்லது மேலாக (பெற்றோல்)* | *1,000.00* |
| | *(ஈ)* | | *750 கி.கி அல்லது மேலாக (டீசல்)* | *1,100.00* |
| *20. கனரக இழுவை வண்டி* | *(அ)* | | *2,000கி.கி ற்கு குறைவாக* | *4,000.00* |
| | *(ஆ)* | | *2,000 கி.கி அல்லது மேலாக, ஆனால் 5,000 கி.கி குறைவாக* | *5,000.00* |
| *21. இழுவை லொறி* | *(இ)* | | *5,000 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 10,000 கி.கி ற்கு குறைவாக* | *7,500.00* |
| | *(ஈ)* | | *10,000 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 15,000 கி.கி ற்கு குறைவாக* | *9,000.00* |
| | *(உ)* | | *15,000 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 20,000 கி.கி ற்கு குறைவாக* | *12,500.00* |
| | *(ஊ)* | | *20,000 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 25,000 கி.கி ற்கு குறைவாக* | *15,000.00* |
| | *(எ)* | | *25,000 கி.கி ற்கு அல்லது மேலாக, ஆனால் 30,000 கி.கி ற்கு குறைவாக* | *17,500.00* |
| | *(ஏ)* | | *30,000 கி.கி ற்கு அல்லது மேலாக* | *19,000.00* |

## அட்டவணை VII

[ஒழுங்குவிதி 11]

### வருடாந்த அரசிறை உரிமக் கட்டணங்கள்

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| வாகன வகுதி | | செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ஒரு பயணியின் ஆசனத்திற்கு) (ரூபா.) |
| 1. | இலங்கை போக்குவரத்து சபைக்கு அல்லது பிராந்தியப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஓம்னிபஸ் வண்டி | 50.00 |
| 2. | இலங்கை போக்குவரத்துச் சபைக்கு அல்லது ஏதேனும் பிராந்தியப் போக்குவரத்து சபைக்கு அல்லாத ஆளொருவருக்குச் சொந்தமான ஓம்னிபஸ் வண்டி | 200.00 |
| 3. | தனியார் மோட்டார் கோச்சு, தனியார் இலகுரக மோட்டார் கோச்சு அல்லது தனியார் கனரக மோட்டார் கோச்சு | 650.00 |

## அட்டவணை VIII

[ஒழுங்குவிதி 13]

### ஊர்திச் சாலைகள் முதலியவற்றைப் பதிவு செய்வதற்கான கட்டணங்கள்

| நிரல் I | | நிரல் II | நிரல் III | நிரல் IV | நிரல் V |
|---|---|---|---|---|---|
| பணி | | வழமையான அடிப்படைக் கட்டணம் (ரூபா.) | | | |
| | | | வகுப்பு அ | வகுப்பு ஆ | வகுப்பு இ |
| 1. | ஊர்திச் சாலை, லொறி உடற்பாக உற்பத்தி ஆலை அல்லது இழுவைவண்டி ஆலையொன்றினை சோதனையிடுதல் மற்றும் பதிவு செய்தல் | 35,000.00 | - | - | - |
| 2. | வாகனம் ஒன்றிணைக்கும் ஆலையொன்றினை சோதனையிடுதல் மற்றும் பதிவு செய்தல் | 35,000.00 | - | - | - |
| 3. | வாகன உற்பத்தி ஆலையொன்றினை சோதனையிடுதல் மற்றும் பதிவு செய்தல் | 100,000.00 | - | - | - |

| நிரல் I | | நிரல் II | நிரல் III | நிரல் IV | நிரல் V |
|---|---|---|---|---|---|
| பணி | | வழமையான அடிப்படைக் கட்டணம் (ரூபா.) | | | |
| | | | வகுப்பு அ | வகுப்பு ஆ | வகுப்பு இ |
| 4. | ஊர்திச் சாலை, லொறி உடற்பாக உற்பத்தி ஆலை அல்லது இழுவைவண்டி ஆலையொன்றின் பதிவைப் புதுப்பித்தல் | 100,000.00 | - | - | - |
| 5. | வாகனம் ஒன்றிணைக்கும் ஆலையொன்றின் பதிவைப் புதுப்பித்தல் | 15,000.00 | - | - | - |
| 6. | வாகன உற்பத்தி ஆலையொன்றின் பதிவைப் புதுப்பித்தல் | 70,000.00 | - | - | - |
| 7. | முகவரொருவர் அல்லது விற்பனையாளரொருவரை சோதனையிடுதல் மற்றுத் பதிவு செய்தல் | 125,000.00 | - | - | - |
| 8. | முகவரொருவர் அல்லது விற்பனையாளரொருவரின் பதிவைப் புதுப்பித்தல் | 63,000.00 | - | - | - |
| 9. | ஊர்தி சாலை, லொறி உடற்பாக உற்பத்தி ஆலை, இழுவைவண்டி உற்பத்தி ஆலை, வாகனம் ஒன்றிணைக்கும் ஆலை, வாகன உற்பத்தி ஆலையொன்றின், முகவரொருவர் அல்லது விற்பனையாளரொருவரின் பதிவுச் சான்றிதழின் இணைப் பிரதியொன்றினை வழங்குதல் | 1,000.00 | - | - | - |
| 10. | சாரதிப் பாடசாலையொன்றைப் பதிவு செய்தல் (இரண்டு வருட காலப்பகுதிக்கு) | - | 25,000.00 | 19,000.00 | 12,500.00 |
| 11. | சாரதிப் பாடசாலையொன்றின் பதிவைப் புதுப்பித்தல் (இரண்டு வருட காலப்பகுதிக்கு) | - | 12,500.00 | 10,000.00 | 8,000.00 |
| 12. | சாரதிப் பாடசாலையொன்றின் பதிவைப் புதுப்பித்தலுக்கான தாமதக் கட்டணம் ( ஒரு மாத தாமதத்திற்காக) | - | 1,000.00 | 500.00 | 400.00 |
| 13. | சாரதி அறிவுறுத்துநருக்கான உரிமத்தைப் பதிவு செய்தலும் வழங்குதலும் (இரண்டு வருட காலப்பகுதிக்கு) | - | 7,500.00 | 7,500.00 | 7,500.00 |
| 14. | சாரதி அறிவுறுத்துநர் பதிவைப் புதுப்பித்தல் (இரண்டு வருட காலப்பகுதிக்கு) | - | 7,500.00 | 7,500.00 | 7,500.00 |

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV | நிரல் V |
|---|---|---|---|---|
| பணி | வழமையான அடிப்படைக் கட்டணம் (ரூபா.) | | | |
| | | வகுப்பு அ | வகுப்பு ஆ | வகுப்பு இ |
| 15. சாரதி அறிவுறுத்துநருக்கான உரிமத்தைப் புதுப்பித்தலுக்கான தாமதக் கட்டணம் (ஒரு மாத தாமதத்திற்காக) | - | 500.00 | 500.00 | 500.00 |
| 16. உதவி சாரதி அறிவுறுத்துநருக்கான உரிமத்தைப் பதிவு செய்தலும் வழங்குதலும் (இரண்டு வருட காலப்பகுதிக்கு) | - | - | - | 5,000.00 |
| 17. உதவி சாரதி அறிவுறுத்துநர் பதிவைப் புதுப்பித்தல் (இரண்டு வருட காலப்பகுதிக்கு) | - | - | - | 5,000.00 |
| 18. உதவி சாரதி அறிவுறுத்துநருக்கான உரிமத்தைப் புதுப்பித்தலுக்கான தாமதக் கட்டணம் (ஒரு மாத தாமதத்திற்காக) | | | | 500.00 |
| 19. சாரதிப் பாடசாலையொன்றின் பதிவுச் சான்றிதழின் இணைப்பிரதியொன்றினை வழங்குதல் | | 7,000.00 | 7,000.00 | 7,000.00 |
| 20. சாரதி அறிவுறுத்துநரொருவரின் பதிவுச் சான்றிதழின் இணைப்பிரதியொன்றினை வழங்குதல் | | 5,000.00 | 5,000.00 | 5,000.00 |
| 21. உதவ சாரதி அறிவுறுத்துநரொருவரின் பதிவுச் சான்றிதழின் இணைப்பிரதியொன்றினை வழங்குதல் | | - | - | 3,000.00 |

## அட்டவணை IX

[ஒழுங்குவிதி 14]

### நானாவிதக் கட்டணங்கள்

| நிரல் I | நிரல் II |
|---|---|
| பணி | செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.) |
| 1. மோட்டார் வாகனமொன்றின் பதிவு தொடர்பான தகவலின் கனிணிமயப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பொன்றை வழங்குதல் | 1,000.00 |
| 2. பதிவுச் சான்றிதழொன்றின் தகவல்களை மாற்றுதல் | 3,000.00 |

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| | பணி | செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.) |
| 3. | மோட்டார் வாகனமொன்றைப் பதிவுசெய்யும் நோக்கங்களுக்காக சீ.எம்.ரீ கெசி இலக்கங்களை வழங்குதல் | 10,000.00 |
| 4. | முதற்பதிவின் கெசி இலக்கம் மாற்றப்படும் போது கெசி இலக்கத்தை திருத்துதல் | 50,000.00 |
| 5. | மோட்டார் வாகனமொன்றினை சோதனையிடுதல்- | |
| | (அ) மோட்டார் வாகனங்கள் திணைக்களத்தின் அலுவலக வளாகங்களில் (மோட்டார் சைக்கிள் அல்லது இலகுரக மோட்டார் சைக்கிள் தவிர்ந்த) மோட்டார் வாகனமொன்றினை சோதனையிடுதல் | 1,000.00 |
| | (ஆ) மோட்டார் வாகனங்கள் திணைக்களத்தின் அலுவலக வளாகங்களின் வெளியே (மோட்டார் சைக்கிள் அல்லது இலகுரக மோட்டார் சைக்கிள் தவிர்ந்த) மோட்டார் வாகனமொன்றினை சோதனையிடுதல் | 2,000.00 |
| 6. | மோட்டார் சைக்கிள் அல்லது இலகுரக மோட்டார் சைக்கிளினை சோதனையிடுதல்- | |
| | (அ) மோட்டார் வாகனங்கள் திணைக்களத்தின் அலுவலக வளாகங்களில் மோட்டார் சைக்கிள் அல்லது இலகுரக மோட்டார் சைக்கிளொன்றினை சோதனையிடுதல் | 500.00 |
| | (ஆ) மோட்டார் வாகனங்கள் திணைக்களத்தின் அலுவலக வளாகங்களின் வெளியே மோட்டார் சைக்கிள் அல்லது இலகுரக மோட்டார் சைக்கிளொன்றினை சோதனையிடுதல் | 1,000.00 |
| 7. | மோட்டார் வாகனமொன்றின் ஒரேவிதமான சோதனையிடுகை- | |
| | (அ) மோட்டார் சைக்கிள் அல்லது இலகுரக மோட்டார் சைக்கிளொன்றின் ஒரேவிதமான சோதனையிடுகை | 5,000.00 |
| | (ஆ) ஏதேனும் மோட்டார் வாகனமொன்றின் ஒரேவிதமான சோதனையிடுகை | 10,000.00 |
| 8. | அடையாள சான்றிதழ்களின் நோக்கங்களுக்காக மோட்டார் வாகனமொன்றின் சோதனையிடுதல்- | |
| | (அ) மோட்டார் வாகனங்கள் திணைக்களத்தின் அலுவலக வளாகங்களில் (மோட்டார் சைக்கிள் உட்பட) மோட்டார் வாகனமொன்றினை சோதனையிடுதல் | 500.00 |
| | (ஆ) மோட்டார் வாகனங்கள் திணைக்களத்தின் அலுவலக வளாகங்களின் வெளியே (மோட்டார் சைக்கிள் உட்பட) மோட்டார் மோட்டார் வாகனமொன்றினை சோதனையிடுதல் | 1,000.00 |
| 9. | மோட்டார் வாகனங்கள் திணைக்களத்தின் அலுவலக வளாகங்களின் வெளியே (மோட்டார் சைக்கிள் உட்பட) மோட்டார் மோட்டார் வாகனமொன்றினை சோதனையிடுதலுக்கான போக்குவரத்துக் கட்டணம் | 3,000.00 |
| 10. | மோட்டார் வாகனமொன்று எந்த வகுப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அந்த வகுப்பை மாற்றுவதற்கான (மாற்றம்) அனுமதி அளித்தல் | |
| | (அ) இரு நோக்கு வாகனமொன்றினை மோட்டார் கோச்சொன்றாக அல்லது இலகுரக மோட்டார் கோச்சொன்றாக | 50,000.00 |
| | (ஆ) இரு நோக்கு வாகனமொன்றினை மோட்டார் லொறியொன்றாக அல்லது இலகுரக மோட்டார் லொறியொன்றாக | 50,000.00 |
| | (இ) மோட்டார் கோச் அல்லது இலகுரக மோட்டார் கோச்சொன்றினை இரு நோக்கு வாகனமொன்றாக- | |
| | (i) முதலாவது பதிவிலிருந்து ஓராண்டுமுடிவதற்கு முன்னர் | 320,000.00 |
| | (ii) முதலாவது பதிவிலிருந்து ஓராண்டு முடிவுற்ற பின்னர் ஆனால் இரண்டு ஆண்டுகள் முடிவுறுமுன்னர் | 250,000.00 |

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *பணி* | *செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.)* |
| (iii) முதலாவது பதிவிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் ஆனால் மூன்று ஆண்டுகள் முடிவுறுமுன்னர் | *200,000.00* |
| (iv) முதலாவது பதிவிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் ஆனால் பத்து ஆண்டுகள் முடிவுறுமுன்னர் | *160,000.00* |
| (v) முதலாவது பதிவிலிருந்து பத்து ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் | *320,000.00* |
| (ஈ) மோட்டார் லொறி அல்லது இலகுரக மோட்டார் லொறியின் இரு நோக்கு வாகனமொன்றாக | |
| (i) முதலாவது பதிவிலிருந்து ஓராண்டுமுடிவதற்கு முன்னர் | *320,000.00* |
| (ii) முதலாவது பதிவிலிருந்து ஓராண்டு முடிவுற்ற பின்னர் ஆனால் இரண்டு ஆண்டுகள் முடிவுறுமுன்னர் | *250,000.00* |
| (iii) முதலாவது பதிவிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் ஆனால் மூன்று ஆண்டுகள் முடிவுறுமுன்னர் | *200,000.00* |
| (iv) முதலாவது பதிவிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் ஆனால் பத்து ஆண்டுகள் முடிவுறுமுன்னர் | *160,000.00* |
| (v) முதலாவது பதிவிலிருந்து பத்து ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் | *320,000.00* |
| (உ) மோட்டார் கோச் அல்லது இலகுரக மோட்டார் கோச்சொன்றினை மோட்டார் லொறி அல்லது இலகுரக மோட்டார் லொறியொன்றாக | *75,000.00* |
| (ஊ) மோட்டார் லொறி அல்லது இலகுரக மோட்டார் லொறியொன்றினை மோட்டார் கோச் அல்லது இலகுரக மோட்டார் கொச்சொன்றாக | |
| (i) முதலாவது பதிவிலிருந்து ஓராண்டுமுடிவதற்கு முன்னர் | *300,000.00* |
| (ii) முதலாவது பதிவிலிருந்து ஓராண்டு முடிவுற்ற பின்னர் ஆனால் இரண்டு ஆண்டுகள் முடிவுறுமுன்னர் | *200,000.00* |
| (iii) முதலாவது பதிவிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் ஆனால் மூன்று ஆண்டுகள் முடிவுறுமுன்னர் | *160,000.00* |
| (iv) முதலாவது பதிவிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் ஆனால் பத்து ஆண்டுகள் முடிவுறுமுன்னர் | *150,000.00* |
| (எ) முதலாவது பதிவிலிருந்து பத்து ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் | *250,000.00* |
| (எ) மோட்டார் முச்சக்கர வண்டியொன்றினை மோட்டார் முச்சக்கர வேன் ஒன்றாக அல்லது மோட்டார் முச்சக்கர வேனொன்றினை மோட்டார் முச்சக்கர வண்டியொன்றாக | *15,000.00* |
| (ஏ) மோட்டார் லொறி, இலகுரக மோட்டார் லொறி, கனரக மோட்டார் லொறி அல்லது இரு நோக்கு வாகனமொன்றின் உடற்கோப்பு நிர்மாணத்திலான மாற்றம் | |

| நிரல் I | நிரல் II |
|---|---|
| பணி | செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.) |
| (i) 1000 சீசீக்கு மேலாக என்ஜின் கொள்ளளவைக் கொண்டது | 32,000.00 |
| (ii) 1000 சீசீக்கு குறைவாக என்ஜின் கொள்ளளவைக் கொண்டது | 1,000.00 |
| (ஐ) மோட்டார் லொறி, இலகுரக மோட்டார் லொறி, கனரக மோட்டார் லொறி அல்லது இரு நோக்கு வாகனமொன்றின் சவாரி நோக்கத்துக்காக உடற்கோப்பு நிர்மாணத்திலான மாற்றம் | 32,000.00 |
| (ஒ) மோட்டார் லொறி, இலகுரக மோட்டார் லொறி அல்லது கனரக மோட்டார் லொறியொன்றின் சாரதி இருக்கைளின் உடற்கோப்பு நிர்மாணத்திலான மாற்றம் | 25,000.00 |
| 11. மோட்டார் வாகனமொன்றின் எரிபொருள் வகையின் மாற்றலினை பதிவு செய்தல்- | |
| (அ) மோட்டார் கார் மற்றும் இரு நோக்கு வாகனம்- | |
| (i) முதலாவது பதிவில் பெற்றோல் மோட்டார் காரினை டீசலாக | 400,000.00 |
| (ii) முதலாவது பதிவிலிருந்து ஓராண்டினுள் பெற்றோல் மோட்டார் காரினை டீசலாக | 400,000.00 |
| (iii) முதலாவது பதிவிலிருந்து இரண்டாண்டுகளினுள் பெற்றோல் மோட்டார் காரினை டீசலாக | 300,000. 00 |
| (iv) முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளினுள் பெற்றோல் மோட்டார் காரினை டீசலாக | 200,000.00 |
| (v) முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளுக்குப் பின்னரும் அதற்கப்பாலும் பெற்றோல் மோட்டார் காரினை டீசலாக | 100,000.00 |
| (vi) முதலாவது பதிவில் பெற்றோல் இரு நோக்கு வாகனத்தினை டீசலாக | 400,000.00 |
| (vii) முதலாவது பதிவிலிருந்து ஓராண்டினுள் பெற்றோல் இரு நோக்கு வாகனத்தினை டீசலாக | 400,000.00 |
| (viii) முதலாவது பதிவிலிருந்து இரண்டாண்டுகளினுள் பெற்றோல் இரு நோக்கு வாகனத்தினை டீசலாக | 300,000.00 |
| (ix) முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளினுள் பெற்றோல் இரு நோக்கு வாகனத்தினை டீசலாக | 200,000.00 |
| (x) முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளுக்குப் பின்னரும் அதற்கப்பாலும் பெற்றோல் இரு நோக்கு வாகனத்தினை டீசலாக | 100,000.00 |
| (xi) முதலாவது பதிவில் டீசல் மோட்டார் காரினை பெற்றோலாக | 50,000.00 |
| (xii) முதலாவது பதிவிலிருந்து ஓராண்டினுள் டீசல் மோட்டார் காரினை பெற்றோலாக | 45,000.00 |
| (xiii) முதலாவது பதிவிலிருந்து இரண்டாண்டுகளினுள் டீசல் மோட்டார் காரினை பெற்றோலாக | 40,000.00 |
| (xiv) முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளினுள் டீசல் மோட்டார் காரினை பெற்றோலாக | 35,000.00 |
| (xv) முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளுக்குப் பின்னரும் அதற்கப்பாலும் டீசல் மோட்டார் காரினை பெற்றோலாக | 30,000.00 |
| (xvi) முதலாவது பதிவில் டீசல் இரு நோக்கு வாகனத்தினை பெற்றோலாக | 50,000.00 |

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| பணி | | செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.) |
| (xvii) | முதலாவது பதிவிலிருந்து ஓராண்டினுள் டீசல் இரு நோக்கு வாகனத்தினை பெற்றோலாக | 45,000.00 |
| (xviii) | முதலாவது பதிவிலிருந்து இரண்டாண்டுகளினுள் டீசல் இரு நோக்கு வாகனத்தினை பெற்றோலாக | 40,000.00 |
| (xix) | முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளினுள் டீசல் இரு நோக்கு வாகனத்தினை பெற்றோலாக | 35,000.00 |
| (xx) | முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளுக்குப் பின்னரும் அதற்கப்பாலும் டீசல் இரு நோக்கு வாகனத்தினை பெற்றோலாக | 30,000.00 |
| (xxi) | டீசல் மோட்டார் கார் அல்லது இரு நோக்கு வாகனத்தினை இலத்திரனியலாக | 40,000.00 |
| (xxii) | முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளினுள் பெற்றோல் மோட்டார் காரினை இலத்திரனியல் மோட்டார் காராக | 10,000.00 |
| (xxiii) | முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளின் பின்னர் பெற்றோல் மோட்டார் காரினை இலத்திரனியல் மோட்டார் காராக | 15,000.00 |
| (xxiv) | முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளினுள் பெற்றோல் இரு நோக்கு வாகனத்திலிருந்து இலத்திரனியல் இரு நோக்கு வாகனமாக | 10,000.00 |
| (xvii) | முதலாவது பதிவிலிருந்து மூன்றாண்டுகளின் பின்னர் பெற்றோல் இரு நோக்கு வாகனத்திலிருந்து இலத்திரனியல் நோக்கு வாகனமாக | 15,000.00 |
| (ஆ) | ஏனைய வாகனங்கள்- | |
| (i) | பெற்றோல் மோட்டார் லொறி /இலகுரக மோட்டார் லொறி /கனரக மோட்டார் லொறியினை டீசலாக | 100,000.00 |
| (ii) | பெற்றோல் மோட்டார் கோச் /இலகுரக மோட்டார் கோச் /கனரக மோட்டார் கோச்சினை டீசலாக | 100,000.00 |
| (iii) | பெற்றோல் மோட்டார் முச்சக்கரவண்டி /பெற்றோல் மோட்டார் வேனினை டீசலாக | 15,000.00 |
| (iv) | டீசல் மோட்டார் முச்சக்கரவண்டி /மோட்டார் முச்சக்கர வேனினை பெற்றோலாக | 10,000.00 |
| (v) | பெற்றோல் அல்லது டீசல் மோட்டார் முச்சக்கரவண்டி /மோட்டார் முச்சக்கரவண்டியினை இலத்திரனியலாக | 2,000.00 |
| (vi) | பெற்றோல் நான்கு சில்லு வண்டியினை இலத்திரனியல் நான்கு சில்லுவண்டியாக | 5,000.00 |
| (இ) | எஞ்சின் இலக்கத்தை உள்ளூரில் முத்திரையிடல் | 3,000.00 |
| 12. | காப்பு நலனுக்கு அவசியமான நிபந்தனைகளை வாகன அரசிறை உரிமமொன்றில் அத்தாட்சிப்படுத்தல்- | |
| (அ) | தகுதிச்சான்றிதழ்களை வழங்குவதற்கு ஊர்திச் சாலையொன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பமொன்றினை வழங்குதல் | 2,000.00 |
| (ஆ) | தகுதிச்சான்றிதழ்களை வழங்குவதற்கு ஊர்திச் சாலையொன்றைப் பதிவு செய்தல் | 15,000.00 |
| (இ) | சோதனை அறிக்கைகளையும் தகுதிச்சான்றிதழ்களையும் கொண்டுள்ள புத்தகத்தொகுதியொன்றினை வழங்குதல் | 5,000.00 |

| நிரல் I | | | நிரல் II |
|---|---|---|---|
| பணி | | | செலுத்தப்படற்பாலதான கட்டணம் (ரூபா.) |
| 13. | பயன்படுத்தப்படாமை பற்றிய சான்றிதழை இயைபான அதிகாரசபைக்கு வழங்குதல்- | | |
| | (அ) | மோட்டார் சைக்கிள் /இலகுரக மோட்டார் சைக்கிள் (ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல்) | 100.00 |
| | (ஆ) | மோட்டார் முச்சக்கரவண்டி /மோட்டார் முச்சக்கர வேன் (ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல்) | 100.00 |
| | (இ) | நான்கு சில்லுவண்டி (ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல்)) | 100.00 |
| | (ஈ) | மோட்டார் கோச் /இலகுரக மோட்டார் கோச் /கனரக மோட்டார் கோச் (ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல்) | 250.00 |
| | (உ) | மோட்டார் லொறி /இலகுரக மோட்டார் லொறி /கனரன மோட்டார் லொறி (ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல்) | 250.00 |
| | (ஊ) | ஏனைய வாகனங்கள் (ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல்) | 200.00 |
| | (எ) | மோட்டார் சைக்கிள் /இலகுரக மோட்டார் சைக்கிள் (ஆறு மாதங்களுக்குப் பிந்தியும் பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிந்தாமலும்) | 200.00 |
| | (ஏ) | மோட்டார் முச்சக்கரவண்டி /மோட்டார் முச்சக்கர வேன் (ஆறு மாதங்களுக்குப் பிந்தியும் பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிந்தாமலும்) | 200.00 |
| | (ஐ) | நான்கு சில்லுவண்டி (ஆறு மாதங்களுக்குப் பிந்தியும் பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிந்தாமலும்) | 200.00 |
| | (ஒ) | மோட்டார் கோச் /இலகுரக மோட்டார் கோச் /கனரக மோட்டார் கோச் (ஆறு மாதங்களுக்குப் பிந்தியும் பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிந்தாமலும்) | 500.00 |
| | (ஓ) | மோட்டார் லொறி /இலகுரக மோட்டார் லொறி /கனரன மோட்டார் லொறி (ஆறு மாதங்களுக்குப் பிந்தியும் பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிந்தாமலும்) | 500.00 |
| | (ஔ) | ஏனைய வாகனங்கள் (ஆறு மாதங்களுக்குப் பிந்தியும் பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிந்தாமலும்) | 250.00 |
| 14. | தரச் சோதனை அறிக்கையொன்றினை வழங்குதல் | | 5,000.00 |
| 15. | விசேட வாகன தனித்துவ தொடர் இலக்கத்தின் கீழ் இயைபான தரவுகளை கணனிமயப் படுத்தப்பட்டதன் பின்னர், 1 ஸ்ரீ 0001 எனும் பதிவுத் தொடர் இலக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான சான்றிதழை வழங்குதல். | | 10,000.00 |

EOG 11 - 0124

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.